*78*

# "வேளை வந்தது"

## யோவா. 12:20-36, 46-48, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*"இன்னும் ஒரு பிரசங்கம் மாத்திரமே நான் பிரசங்கிக்க வேண்டியிருந்தால்" என்ற தலைப்பில் பிரசங்கிக்கும்படி நான் பல வேளைகளில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றேன்.[1] ஒருமுறைக்கும் மேலாக நான் என்னையே, "இது என் கடைசிப் பிரசங்கம் என்று உண்மையிலேயே நான் அறிந்தால், எதைப் பற்றி நான் பிரசங்கிப்பேன்?" என்று கேட்டிருக்கின்றேன். அந்தக் கேள்வியை நான் கேட்டுக்கொள்ளும் ஒவ்வொரு வேளையிலும், நான் மாறுபட்ட முடிவு ஒன்றைக் கொண்டிருந்துள்ளேன். ஏனென்றால், எனது தேர்ந்து கொள்ளுதலானது எதிர்பார்க்கப்படும் மக்கள் கூட்டத்தின் தேவைகள் மற்றும் அந்த வேளையில் எனது மனநிலை ஆகியவற்றைச் சார்ந்திருக்கின்றது.*

*யோவான் 12ல் நாம், இயேசுவின் வெளிப்படையான கடைசி உரையாக,[2] சிலுவையில் அவரது ஏழு வாக்கியங்களைக் கேட்பதற்கு முன், கூட்டத்தார் கேள்விப்பட்ட அவரது கடைசி வார்த்தைகளாக இருந்தவற்றைக் கொண்டுள்ளோம். "இன்னும் ஒரு பிரசங்கம் மாத்திரமே நான் பிரசங்கிக்க வேண்டியிருந்தால்" என்ற தலைப்பு இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அவர் என்ன கூறியிருப்பார்? ஒருவேளை அந்தக் கேள்விக்கு யோவான் 12:20-36 வசனப்பகுதியானது பதில் அளிக்கிறதாக உள்ளது எனலாம்.*

*அது கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய கடைசி வாரத்தின் செவ்வாய்க்கிழமையாக இருந்தது. இயேசு தேவாலயத்தில் போதித்துக் கொண்டிருந்த போது,[3] புறஜாதியாரில் சிலர் அவரைக் காண வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். இந்த வரலாறு, "பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில் சிலர் கிரேக்கர் இருந்தார்கள்" என்று தொடங்குகிறது (யோவா. 12:20). இவர்கள் யூதமார்க்கத்தைத் தழுவியவர்களாக இருக்கலாம், ஆனால் அநேகமாக இவர்கள் கொர்நேலியுவைப் போல் "தேவனுக்குப் பயந்த"வர்களாக[4] இருந்திருக்க வாய்ப்புள்ளது (அப். 10:1, 2): உண்மையான தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருந்த, ஆனால் இன்னும் யூதராவதற்குரிய செயல்முறையில் யூதமார்க்கத்து அமையாதவர்களாயிருந்த புறஜாதியார்.[5]*

*"அவர்கள் கலிலேயா நாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து ..." (யோவா. 12:21அ). கிரேக்கர்கள் பிலிப்புவிடம் வந்தது*

ஏன் என்று நமக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. ஒருவேளை பிலிப்பு கிரேக்கப் பெயர் கொண்டிருந்ததால் இவர்கள் அவரிடம் வந்திருக்கலாம்.[6] ஒருவேளை இவர்களும்கூடப் பெத்சாயிதா[7] ஊரில் இருந்து வந்திருந்ததால் இவர்கள் அவரிடம் வந்திருக்கலாம். ஒருவேளை இயேசுவின் சீஷர்களில் பிலிப்புவே, இவர்கள் முதலில் எதிர்கொண்டவராக இருந்திருக்கலாம்.

இவர்கள், " 'ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்' என்று அவனைக் கேட்டுக் கொண்டார்கள்" (யோவா. 12:21ஆ). இவர்கள் இயேசுவைப் பற்றி எவ்வாறு அறிந்தார்கள்? ஒருவேளை இவர்கள், சில நாட்களுக்கு முன்பு அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது அங்கிருந் திருக்கலாம். ஒருவேளை இவர்கள், அவர் புறஜாதியாரின் மண்டபத்தில் போதித்ததைக் கேட்டிருந்து, அவரை இன்னும் சிறப்பாக அறிய விரும்பி இருக்கலாம்.[8] அவர்கள், "கேட்டுக் கொண்டார்கள்" என்று வேத வசனப் பகுதி கூறுகிறது. மூலவசனத்தில் இந்த வார்த்தைக் கட்டமைப்பு, அவர்கள் தங்கள் கோரிக்கையில் விடாப்படியாய் இருந்தனர் என்று சுட்டிக் காண்பிக்கிறது.

பிலிப்பு என்ன செய்வதென்று நிச்சயமில்லாதவராய் இருந்தார். புறஜாதியாரிடத்திற்குப் போகவேண்டாம், ஆனால் "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" மாத்திரம் போங்கள் என்று கிறிஸ்து பன்னிருவருக்குக் கூறியிருந்தார் (மத். 10:5, 6). பிலிப்பு [தமது] நண்பர் ஒருவரின் உதவியை நாடினார்:[9] "பிலிப்பு வந்து, அதை அந்திரேயா வுக்கு அறிவித்தான்" (யோவா. 12:22அ). பின்பு, "அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்" (வ. 22ஆ).

கிரேக்கர்களின் வேண்டுகோளுக்குக் கிறிஸ்து இணங்கினாரா அல்லவா என்று நமக்கு கூறப்படவே இல்லை. எல்லா விவரங்களையும் நமக்குக் கொடுப்பதற்காக இன்றி, யோவான் 12ன் கடைசிப்பகுதியில் உள்ள இயேசுவின் வார்த்தைகளுக்கு ஒரு பின்னணியைக் கொடுப்பதற்காகவே யோவான் இவ்வரலாற்றைப் பதிவு செய்தார். எவ்வகையிலும், கர்த்தர் தமது பதிலை (வ. 32ஐக் காணவும்) கொடுத்தபோது, அவர், அந்தக் கிரேக்கர்களை யும் - மற்றும் நாம் உட்பட மற்ற எல்லாப் புறஜாதியாரையும் - தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது உறுதி.

அந்திரேயாவும், பிலிப்புவும், கிரேக்கர்களின் விருப்பத்தை இயேசு விடம் கூறியபோது அவர், "வேளை வந்தது" என்று பதில் அளித்தார் (வ. 23). கர்த்தர் இந்தச் சொற்றொடரைக் கொண்டு, அவரது வெளிப்படை யான கடைசி எடுத்துரைப்பாயிருக்கக் கூடியதை அறிமுகப்படுத்தினார். இந்த வேளை வரையிலும் அவர், "அவருடைய வேளை இன்னும் வரவில்லை" என்று கூறியிருந்தார் (யோவா. 7:30; யோவா. 2:4; 7:6; 8:20ஐக் காணவும்); இப்போது அது வந்திருந்தது (யோவா. 13:1ஐக் காணவும்).

"வேளை வந்தது" என்று இயேசு கூறியபோது, அவர் தமது மரணத்தையே முதலாவதாக தம் சிந்தையில் கொண்டிருந்தார் (யோவா. 12:24); ஆனால் வேத வசனப்பகுதியானது அதன் தொடர்பான பல சிந்தனைகளைத் தொடுகிறது. இந்தக் காரணத்தினாலேயே, "வேளை வந்தது" என்பதன் மீதான நமது படிப்பு பல்வேறு வகையான

*தலைப்புக்களை எடுத்துரைத்து முடிக்கும். இருப்பினும் சிலுவை என்பதே எப்போதும் மையக் கருத்தாக இருக்கும்.*

## *சிலுவை மற்றும் ஒப்புவித்தல் ஆகியவற்றிற்கான வேளை (வ. 23-26)*

***சிலுவை (வ. 23, 24)***

*கிறிஸ்து, "மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான[10] வேளை வந்தது" என்று கூறித் தமது பிரசங்கத்தைத் தொடங்கினார் (வ. 23). "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடர் மேசியாவைக் குறிப்பிட்டது (தானி. 7:13). "கிறிஸ்து மகிமைப்படும்படியான வேளை வந்தது" என்று இயேசு கூறினார். அவர் தமது மரணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார் (யோவா. 12:24), ஆனால் அவர் கல்லறைக்கு அப்பால் உயிர்த்தெழுதலையும் பரத்துக் கேறுதலையும் காணக்கூடியவராயிருந்தார்.*

*இயேசுவின் வார்த்தைகள் கூட்டத்தினரை அநேகமாக உணர்வெழுச்சி அடையச் செய்திருக்கலாம். அவர்களின் சிந்தைகளில், "மகிமைப்படுதல்" என்ற வார்த்தையானது, மேசியாவின் அரசியல் ரீதியான ராஜ்யத்தை அமைத்தல் என்பதைக் குறிப்பிட்டிருக்கலாம். அவர்கள் ஒரு சில நாட்களுக்கு முன்பு கிறிஸ்து நகருக்குள் சென்ற வெற்றிப் பிரவேசத்தின் போது அவர் மகிமைப்படுத்தப்படுவார் என்று எதிர்பார்த்திருந்தனர், ஆனால் சில காரணங்களினால், அவர்களின் எதிர்பார்ப்புகளை அவர் நிறைவேற்றாதிருந்தார். கடைசியாக, இப்போது அவர் மகிமைப்படுதலைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் அநேகமாக, ரோமர்களுக்கு எதிராகக் கிறிஸ்து தமது அரியணையை ஸ்தாபித்தலுக்கான முகாமைத் தொடங்குதலின் கால அட்டவணையை அறிவிப்பார் என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருந்திருக்கலாம். நீண்ட காலத்திற்குப் பின்பு கடைசியாக, நித்தியத்திற்கான எக்காள முழக்கம் ஒலிக்கப்பட்டு, பரலோக சேனைகள் அணிவகுத்து நின்றது, வெற்றி கண்ணுக்கெட்டிய தொலைவில் இருந்தது என்பதே அவர்களின் அழுத்தமான எண்ணமாக இருந்தது! இராணுவ யுக்திகளுக்குப் பதிலாக, மரித்தல் என்பதைப் பற்றிக் கிறிஸ்து பேசத் தொடங்கியபோது அவர்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும்!*

*கர்த்தர் ஒரு எளிய ஆனால் வல்லமை நிறைந்த விவரிப்பைப் பயன் படுத்தினார்: "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு கிறேன், கோதுமைமணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (வ. 24). ஒரு அலமாரியில் விதை ஒன்றை வையுங்கள், அது பெருகாது; அது "தனியாகவே இருக்கும்." நிலத்தில் விதையை விதைத்து அதைப் போஷியுங் கள், அது "மரிக்கும்" (அதாவது, அது உருவழிந்து தனது அடையாளத்தை இழக்கும்) - ஆனால் இந்த "மரணம்" அதை "மிகுந்த பலனைக் கொடுக்கக்" கூடியதாக்கும். அது நூறு மடங்காக, அறுபது மடங்காக அல்லது முப்பது*

*மடங்காகப் பெருகும் (மத். 13:8). இந்த விவரிப்பில் இயேசுவே விதையாக இருக்கின்றார். அவர் மரிக்கவில்லையென்றால், அவர் தமது ஜீவனைக் காத்துக் கொள்வார், ஆனால் அவரால் மற்றவர்களை ஆசீர்வதிக்க முடியாது. புதிய ஜீவனை இருக்கும் நிலைக்குக் கொண்டு வருவதற்கு, அவர் மரணம் அடைதல் என்பதுதான் ஒரே வழியாக இருந்தது.*

***ஒப்புவித்தல் (வ. 25, 26)***

*கிறிஸ்து தொடர்ந்து, "தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்'' என்று கூறினார் (வ. 25). இவ்விடத்தில் பயன்படுத்தப்படும் விதத்தில், "வெறுக்கிறவன்'' என்பது "குறைவாய் நேசிக்கிறவன்" என்று அர்த்தப்படுகிறது; நாம் கர்த்தருடைய சித்தத்தைச் செய்தலை நேசிப்பதைக் காட்டிலும் குறைவாகவே நமது ஜீவனை நேசிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இந்தப் பிரசங்கம், முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரைகளால் நிறைந்துள்ளது: "நீங்கள் உங்கள் ஜீவனை நேசித்தால் அதை இழந்துபோவீர்கள்"; "நீங்கள் உங்கள் ஜீவனை வெறுத்தால், அதைக் காத்துக்கொள்வீர்கள்"; "மரித்தல் என்பது தான் வாழ்வதற்கு ஒரே வழியாக உள்ளது."*

*இயேசு தமது வார்த்தைகளை முதலில் தமக்கே நடைமுறைப் படுத்தினார்: அவர் தமது நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், தேவனுடைய திட்டங்களில் அவர் மதிப்புடையவராய் இருக்க வேண்டு மென்றால், அவர் மரிக்க வேண்டியதாயிருந்தது. அவர் தமது வார்த்தை களை நமக்கும் நடைமுறைப் படுத்துவார். நாம் தேவனுக்கு மதிப்புடைய வர்களாய் இருக்க வேண்டுமென்றால், நாமும் கூட "மரிக்க" வேண்டும். ஆதிக் கிறிஸ்தவர்களில் பலர் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பதற்காக, உடல்ரீதியாக மரிக்க வேண்டியிருந்தது (வெளி. 2:10). அவ்வகையான தியாகத்தைச் செய்யும்படி நாம் அழைக்கப்பட்டிரா திருப்பினும்கூட, நாம் இன்னமும் "சுயத்திற்கு மரிக்க" வேண்டியுள்ளது. பவுல், "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்; ... இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' என்று எழுதினார் (கலா. 2:20அ).*

*இயேசு தொடர்ந்து பிரசங்கிக்கையில், அவர் தமது சிந்தனையைப் பெருக்கி, "மரித்தலுக்கான" மனவிருப்பத்துடன் இருப்பதற்கு வல்லமை நிறைந்த தூண்டுதலைக் கொடுத்தார்: அவருக்கு ஊழியம் செய்தல். அவர், "ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் ..." என்று தொடங்கினார் (யோவா. 12:26அ). நாம் கர்த்தருக்குச் சுயநலமற்ற ஊழியத்தில் ஒப்புவித் தலுடன் இருப்பதன் மூலம் நமது ஜீவனை "வெறுப்பதை" காண்பிக்கின் றோம். அந்த ஒப்புவித்தலை மேற்கொள்ள மனதாயிருக்கிறவர் "என்னைப் பின்பற்றக்கடவன்" என்று இயேசு கூறினார் (வ. 26ஆ). அவரது அடுத்த கூற்றானது, இவ்வகையான உறுதிப்பாட்டைத் தகுதியுடையதாக மேற்கொள்ளுவதில் கிடைக்கும் பலன்கள் மீது கவனம் செலுத்திற்று. அவர், "நான் எங்கே இருக்கிறேனோ[11] அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்"*

என்று கூறினார் (வ. 26இ). (அந்தச் சிந்தனையைக் கிறிஸ்து பிற்பாடு யோவான் 14:1-3ல் விரிவாக்கினார்.) பின்பு அவர், "ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" என்று கூடுதலாகக் கூறினார் (யோவா. 12:26ஈ). தேவனாலேயே கனம்பண்ணப் படுதலைக் கற்பனை செய்து பாருங்கள்! பவுல், "அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்று கூறினார் (2 கொரி. 4:17)!

## போராட்டம் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றிற்கான வேளை (வ. 27-30)

### போராட்டம் (வ. 27)

மரித்தலைப் பற்றிப் பேசுவதற்கு இயேசு தயங்காதிருந்தார், ஆனால் அது, அவர் அந்த விஷயத்தைச் சந்தோஷமானதாகக் கண்டார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மரணத்தை எதிர்கொள்ளுதல் என்பது நமக்குச் சுலபமானதாக இருப்பதில்லை, அது கர்த்தருக்கும் கூடச் சுலபமானதாக இருந்ததில்லை. அவர் நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்ட இயந்திர மனிதனாக இருந்ததில்லை. அவர் மாம்சமும் இரத்தமும் உடையவராயிருந்தார்; நாம் மனம் புண்படுவதுபோன்றே அவரும் மனம் புண்பட்டிருந்தார்.

கிறிஸ்து, "... கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கடவது" என்று ஜெபித்த கெத்செமனேத் தோட்டத்துக் காட்சியை (மத். 26:39) யோவான் பதிவு செய்யவில்லை.[12] இருப்பினும் அவர் கெத்செமனே தோட்டத்திற்குச் செல்லுமுன்பாக இயேசுவின் ஆத்துமாவுக் குள் இருந்த நிலை பற்றிய குறிப்பு ஒன்றை நமக்குத் தந்தார். கர்த்தர், "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது" என்று கூறினார் (யோவா. 12:27அ). The New English Bible என்ற வேதாகமத்தில் "my soul is in turmoil" ("என் ஆத்துமா கலவரம் அடைந்திருக்கிறது") என்றுள்ளது. பயங்கரமான விஷயங்கள் எதிர்கொண்டிருந்தன: உடல்ரீதியான மரணத்தின் பெருந்துன்பம் மற்றும் ஆவிக்குரிய மரணத்தின் (தேவனை விட்டுப் பிரிந்திருத்தலின்) பெருந்துன்பம் ஆகியவற்றுடன் கூடுதலாக, சிலுவையின் வெட்கக்கேடு, சாத்தானுடன் ஆவிக்குரிய போராட்டமும் (12:31), மற்றும் பதினைந்து நூற்றாண்டுக் காலமாக போஷிக்கப்பட்டிருந்த தேவனுடைய மக்களால் புறக்கணிக்கப்படுதல் என்ற மனவலியும் இருந்தன.

இவையெல்லாவற்றின் வெளிச்சத்தில் இயேசு, "நான் என்ன சொல்லு வேன்?" என்று கேட்டார் (வ. 27ஆ). அதாவது, "நான் எந்த விஷயத்திற்காக ஜெபிக்க வேண்டும்?" அவர், "பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும்" (வ. 27இ) என்று ஜெபிக்க வேண்டுமா? இல்லை.[13] அவர், "ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்றார் (வ. 27ஈ). அவர் "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" வந்திருந்தார் (லூக். 19:10). அவர் மரிப்பதற்காகவே பூமிக்கு வந்திருந்தார் (பிலி. 2:7, 8).

*உறுதிப்பாடு (வ. 28-30)*

*இயேசு கீழ்ப்படிதலின் பின்வரும் வார்த்தைகளை உரைத்தார்: "பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" (வ. 28அ). அவர் வாழ்நாள் முழுவதிலும் கீழ்ப்படிதலினால் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி யிருந்தார் (யோவா. 17:4ஐக் காணவும்); அதை, இன்னும் அவர் தமது மரணத்தினால் மகிமைப்படுத்துவார்.*

*அந்த வேளையில் எதிர்பாராத விஷயம் ஒன்று நடைபெற்றது: "அப்பொழுது ... ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று" (யோவா. 12:28இ). இயேசுவின் ஊழியத்தின்போது, தேவன் மூன்றுமுறை வானத்தி லிருந்து பேசினார்: அவர் ஞானஸ்நானம் பெற்றபோது (மத். 3:17), அவர் மறுரூபமடைந்தபோது (மத். 17:5), மற்றும் இந்த வேளையில் அந்த சத்தம், "[எனது நாமத்தை] மகிமைப்படுத்தினேன். இன்னமும் மகிமைப்படுத்து வேன்" என்று கூறிற்று (யோவா. 12:28ஆ). தேவனுடைய நாமம் இயேசுவின் வாழ்வில் மகிமைப்படுத்தப்பட்டிருந்தது; இப்போது அது சிலுவையினால் மகிமைப்படுத்தப்படும்.*

*என்ன நடந்தது என்பது பற்றிய கருத்தில் மக்களிடையே பிரிவினை உண்டாகுமளவுக்குக் கூட்டமானது வானத்திலிருந்து வந்த அறிவிப்பினால் திகைப்படைந்தது. ''அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: 'இடிமுழக்கமுண்டாயிற்று' என்றார்கள். வேறுசிலர்: 'தேவதூதன் அவருடனே பேசினான்' என்றார்கள்" (வ. 29). நாம் கேட்பதற்குத் தயாராக இருக்கின்றவற்றை மட்டுமே நாம் கேட்கின்றோம் என்ற உண்மை நமக்கு நினைவூட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நமது காதுகள் கேட்க முடியாத சத்தங்கள் காற்று மண்டலத்தில் நிறைந்துள்ளன. இருப்பினும் நாம் ஒரு வானொலியை இயங்கச் செய்து ஒரு நிலையத்திற்கு அதை இசைவிக்க முடிந்தபின்பு, வார்த்தைகளையோ அல்லது இசையையோ கேட்கின்றோம். இயேசுவுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் பலர் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதற்குத் தயாரான நிலையில் இருந்ததில்லை; அவர்களுக்கு அது ஒரு "இடிமுழக்கம்" என்பதாக - அதிகமான சத்தம் என்பதாக மட்டும் - இருந்தது. அதுபோலவே, இன்றைய நாட்களிலும் பலர் இயற்கையிலோ (ரோமர் 1:20) அல்லது வேதாகமத்திலோ (எபி. 1:1, 2) தேவனுடைய சத்தத்தைக் "கேட்பதற்குத்" தயாராக இருப்பதில்லை.*

*எழுத்தாளரான யோவானைப் போன்றே, சிலர் அந்த சத்தத்தைக் கேட்டு அதைப் புரிந்துகொண்டனர். அருகில் இருந்தவர்களிடம் (விசேஷ மாக அப்போஸ்தலர்களிடம்) திரும்பிய இயேசு, "இந்தச் சத்தம் என்னி மித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று" என்றார் (யோவா. 12:30). இந்தச் சொல்விளக்கமானது, அநேகமாக, "என்னிமித்தம் மட்டுமின்றி, உங்கள் நிமித்தமாகவும்'' என்று அர்த்தப்படுவதாக இருக்கலாம்.[14] பிதாவினால் ஏற்படுத்தப்பட்ட இந்த உறுதிப்பாடு, குமாரனை வரவிருந்த அவரது சோதனைகளுக்கு/விசாரணைக்குட்படுதல்களுக்கு நிச்சயமாகவே பலப்படுத்திற்று, ஆனால் அது, எதிர்கொண்டு வரவிருந்த இயேசுவின் இலக்கு, தேவனுடைய கால அட்டவணையின்படியானதாக இருந்தது என்று சீஷர்களை இணங்க வைக்கும்படியாகவே வடிவமைக்கப் பட்டிருந்தது.*

# வெற்றிகொள்ளுதல் மற்றும் மாற்றம் ஆகியவற்றிற்கான வேளை (வ. 31-33)

*வெற்றிகொள்ளுதல் (வ. 31)*

*இயேசு சிலுவையில் மரிக்கும் வேளையில் குறிப்பிடத்தக்க பல விஷயங்கள் நடைபெறவிருந்தன. எடுத்துக்காட்டாக, அது ஒரு வெற்றியின் வேளையாக, பொல்லாங்கான சக்திகளின்மீது பெறும் வெற்றியின் வேளையாக இருக்கும். அது தோல்வியின் தருணமாக இருப்பது போலக் காணப்படும், ஆனால் அது உண்மையில் வெற்றிமுழுக்கத்தின் வேளையாக இருக்கும்.*

*இயேசு, "இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின்[15] அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்றார் (வ. 31). "இந்த உலகத்தின் அதிபதி" என்பது சாத்தானைக் குறிக்கிறது (யோவா. 14:30; 16:11ஐக் காணவும்). சிலுவை என்பது சாத்தானுடனான இறுதி நிலை யுத்தமாக இருக்கும். இன்றைய நாட்களில், நன்மை தீமை ஆகியவற்றிற்கிடையில் கற்பனையான, மாயாவாத யுத்தம் பற்றிப் பலர் பேசுகின்றனர் (இது அடிக்கடி "அர்மெகதோன் யுத்தம்" என்று குறிப்பிடப்படுகிறது), ஆனால் அந்த இறுதி நிலையான யுத்தம் சிலுவையில் நடைபெற்றது என்று வேதாகமம் கூறுகிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளான வர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும்" அவர் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் என்று கூறினார் (எபி. 2:14, 15). சாத்தான் இன்றைக்கும் செயல்படுகின்றவனாகவே இருக்கின்றான் (1 பேது. 5:8), ஆனால் நம்மீதான அவனது பற்றுதலான பிடிப்பு முறிக்கப்பட்டுள்ளது; அவன் தோற்கடிக்கப்பட்ட ஒரு விரோதியாக இருக்கின்றான் (யாக். 4:7).*

*மாற்றம் (வ. 32, 33)*

*பாவத்தின் மீதான வெற்றி என்பதே சிலுவையில் பெறப்படவிருந்த மிக முக்கியமான வெற்றியாக இருக்கும் (2 கொரி. 5:21; எபே. 1:7). இயேசுவைக் காண விரும்பிய கிரேக்கர்களை அவர் தமது பிரசங்கத்தில் ஒருக்காலும் மறக்காதிருந்தார். இப்போது அவர், தமது மரணமானது யூதர்களுக்கு மட்டுமானதாக இராமல் எல்லா மனிதர்களுக்குமானதாக இருக்கும் என்று எடுத்துரைத்தார்: "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவா. 12:32).*

*"உயர்த்தப்பட்டிருத்தல்" என்ற சொற்றொடரானது மேன்மைப் பட்டிருத்தல் என்பதைக் குறிப்பதற்கு புதிய ஏற்பாட்டில் மற்ற இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 தீமோ. 3:6; யாக். 4:10), ஆனால் இது யோவான் சுவிசேஷத்தில் எப்பொழுதுமே கர்த்தருடைய மரணத்தைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 3:14; 8:28). நமது*

வேத பாடப்பகுதியின் அடுத்த வசனமானது, "தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் போகிறாரென்பதைக் குறிப்பிடும்படி இப்படிச் சொன்னார்" என்பதை வெளிப்படுத்துகிறது (யோவா. 12:33).[16] அவர் கல்லெறியப்பட்டோ அல்லது யூதர்கள் நிறைவேற்றும் கொலைத் தண்டனையின் வேறு எந்த முறையினாலோ மரிக்கமாட்டார்; மாறாக, அவர் ரோமர்களின் சிலுவையில் "உயர்த்தப்படுவார்."

அது நடைபெறும்போது, அவர் "எல்லாரையும்" தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார்: அதாவது யூதர்களையும் புறஜாதியார்களையும். அவர் இவ்விருதிறத்தாரையும் ஒரே சரீரமாக ஒன்றாக்குவார். பவுல் பிற்பாடு பின்வருமாறு எழுதினார்:

> எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இரு திறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியார்களையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியார்களையும்] தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியார்களையும்] ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே. 2:14-16).

"ஒரே சரீரம்" என்பது சபையாக உள்ளது (எபே. 1:22, 23; கொலோ. 1:18).

இயேசு மக்களை ஓட்ட மாட்டார் அல்லது தள்ள மாட்டார் அல்லது பலவந்தம் பண்ணமாட்டார், ஆனால் அவர்களை அவர் *இழுத்துக் கொள்ளுவார்* என்பதைக் கவனியுங்கள். சிலுவையும் அது பிரதிநிதித்துவப் படுத்தும் அன்பும்தான் தேவனுடைய இழுக்கும் வல்லமையாக உள்ளது (யோவா. 3:16; ரோமர் 5:8). சூரிய ஒளியானது புதிய செடியைப் பூமியிலிருந்து மென்மையாக இழுப்பதுபோலவே, கிறிஸ்துவின் அன்பு மனிதர்களை அவரிடத்திற்கு மென்மையாக இழுக்கிறது.[17]

## குழப்பம் மற்றும் அறைகூவல் ஆகியவற்றிற்கான வேளை (வ. 34-36, 46-48)

### குழப்பம்

இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதில் வியப்பெதுவும் இல்லை; அவர்கள் புரிந்துகொள்ள முயற்சி செய்யவில்லை என்பதே பரிதாபகரமானதாக இருந்தது. அவர்கள், "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் [நியாயப்பிரமாணத்தில்[18]] சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம்" என்று பதில் அளித்தனர் (வ. 34அ). இதைப் பழைய ஏற்பாட்டின் வேத வசனப்பகுதி எதுவும் கூறுவதில்லை, ஆனால் மேசியா ஒரு நித்திய ராஜ்யத்தில் என்றென்றும் அரசாளுவார் என்று பழைய

ஏற்பாடு போதிக்கிறது (ஏசா. 9:7; எசே. 37:25; தானி. 7:14ஐக் காணவும்). மேசியா/கிறிஸ்து "என்றென்றைக்கும்" இருத்தல் என்பது ஒன்றுதான் அவர் இதைச் செய்யக்கூடிய ஒரே வழியாக இருந்தது என்று யூதர்கள் முடிவு செய்தனர்.

அவர்கள், "... மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்?" என்று கேட்டனர் (யோவா. 12:34ஆ). "உயர்த்தப் படுதல்" என்ற சொற்றொடர் சிலுவையில் அறையப்படுதலை குறித்தது என்று அவர்கள் புரிந்துகொண்டனர் என்பது தெளிவு, ஆனால் இது மேசியாவைப் பற்றிய அவர்களின் முன்கருத்துக்களுக்குப் பொருந்த வில்லை. அவர் எப்படி மரித்தும் ஆளுகை செய்யமுடியும்? இயேசு "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடரைத் தங்களுக்குப் பழக்கமற்ற ஏதோ ஒரு கருத்தில் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவுசெய்தனர். அவர்கள், "இந்த மனுஷ குமாரன் யார்?" என்று கேட்டார்கள் (வ. 34இ). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நீர் மேசியாவைப் பற்றிப் பேசுகின்றீரா, அல்லது நீர் வேறு யாரைப் பற்றியாவது பேசுகின்றீரா?" என்று அவர்கள் கேட்டனர்.

***அறைகூவல் (வ. 35, 36, 46-48)***

அவர்களின் கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் அளிப்பதற்கு மாறாக, மறைமுகமாகப் பதில் அளித்தார்: உண்மையில் அவர், உலகத்திற்கு "ஒளி"யாக இருக்கின்றார் என்று குறிப்பிட்டவரே "மனுஷகுமாரன்" என்று பதில் அளித்தார் (வ. 35; 8:12; 9:5ஐக் காணவும்). இருப்பினும், தமது உரையைக் கேட்டவர்கள் மேசியாவைப் பற்றிய விவரிப்பான பட்டப் பெயர்களை வகைப்படுத்தக் கூடியவர்களாயிருக்க வேண்டும் என்பது அவரது சிந்தையில் மேலோங்கியிருந்த எண்ணமல்ல. மாறாக, அவர்கள் தம்மை மேசியா என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமே என்றே அவர் விரும்பினார்.

இவ்வேளையானது அநேகமாக, இந்த மக்கள் விசுவாசிக்கும்படி அவர்களை வற்புறுத்துவதற்கு அவரது தனிப்பட்ட வகையிலான கடைசி வாய்ப்பாக இருந்திருக்கலாம். பல வேளைகளில் நான் ஒரு மக்கள் கூட்டத்திற்கு, அவர்களில் சிலருடன் பேசுவதற்கு இனி ஒருபோதும் இன்னொரு வாய்ப்பைக் கொண்டிருக்க மாட்டேன் என்று அறிந்த நிலையில் பிரசங்கித்திருக்கின்றேன். பொறுப்பு [என்னை] மூழ்கடிக்கக் கூடியதாக இருந்தது. நான் என்ன கூறமுடியும்? நான் என்ன கூறவேண்டும்?

அந்தக் கணத்தின் அவசரத்தன்மை என்பதே கிறிஸ்துவின் வேண்டு கோளில் வலியுறுத்தமாக இருந்தது. அவர், "இன்னும் கொஞ்சக் காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்" என்றார் (12:35அ). முன்பே அவர் தம்மை "உலகிற்கு ஒளி" என்று அடையாளப்படுத்தியிருந்தார் (9:5). அவர் தமது மரணத்திற்கு முன்பு இந்த மக்களிடத்தில் இன்னும் ஒரு சில நாட்களே இருப்பார். ஆகையால் அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்: "இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில்

*நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்" (12:35ஆ). அவர்கள் தம்மைக் கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளு மாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்: "ஒளி உங்களோடிருக்கையில் ... ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்" (வ. 36ஆ). அவர்கள் அவரில் விசுவாசமாயிருந்தால், அவர்கள் "ஒளியின் பிள்ளைகளாயிருப்பார்கள்" (வ. 36ஆ). அவர்கள் அவரது ஒளியின் பிரதிபலிப்புகள் ஆவார்கள்.*

*அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தால் என்னவாகும்? இந்த அத்தியாயத்தின் கடைசிப்பகுதியைக் கண்ணோக்குகையில், ஒளியைப் புறக்கணித்தலின் பரிதாப நிலையை நாம் காண்கின்றோம். அங்கு இயேசு பின்வருமாறு கூறினார்:*

> *என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராத படிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன். ஒருவன் என் வார்த்தை களைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந் தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (வ. 46-48).*

*யோவான், இந்தப் பிரசங்கம் பற்றிய தமது விவரத்தை, "இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார்" என்று கூறி முடித்தார் (வ. 36இ). கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நமது வரைக்குறிப்பு சரியானதாக இருந்ததென்றால், அவர் தமது சீஷர்களுடன் அங்கிருந்து "புறம்பே புறப்பட்டு," ஒலிவ மலையின் சரிவுகளுக்குச் சென்றார் (மத். 24:1, 3). இருப்பினும், "எங்கே" என்பது முக்கியமல்ல: முக்கியமானது எதுவென்றால் அவர் புறப்பட்டுச் சென்று அவர்களை விட்டு "மறைந்தார்" என்பதே முக்கியம். வாய்ப்பிற்கான அவர்களின் நாள் கடந்து சென்றிருந்தது.*

## முடிவுரை

*கர்த்தரின் "கடைசிப் பிரசங்கத்திற்கு" மக்கள் எவ்வகையான பதில்செயலைக் கொண்டிருந்தனர்? யூதர்களின் மத்தியில் மேலோங்கி யிருந்த அவிசுவாசத்தை யோவான் 12ன் கடைசிப் பகுதி (வ. 37-50) வலியுறுத்துகிறது. மக்களைப் பதில்செயல் செய்யும்படி நான் வற்புறுத்தி, அவர்கள் அதைச் செய்யாதபோது நான் எவ்வளவு கவலையாய் இருக்கின் றேன் என்பதை நான் அறிவேன்; இயேசுவின் உரையைக் கேட்டவர்களின் மத்தியில், பதில்செயலில் இருந்த குறைபாடு அவரது இருதயத்தை உடைத்தது என்பது உறுதி.*

*இருப்பினும் இப்போது, நாம் சொந்த நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த வேண்டியுள்ளது.[19] நாம் இயேசுவை மதிக்கின்றோமா? நாம் சிலுவையை மதிக்கின்றோமா? சிலுவை இயேசுவுக்கு எவ்வளவு விலையாயிற்று என்பதை நாம் மதிக்கின்றோமா (வ. 27)? இந்தப் பொழுதின் அவசரத்தை நாம் புரிந்துகொள்ளுகின்றோமா? உங்கள் பதில்செயலுக்கான*

"வேளை வந்துள்ளது." நீங்கள் கர்த்தரிடத்தில் வருவது அவசியமாயிருந்தால், அதை இப்போதே செய்யும்படி நான் உங்களை வேண்டுகின்றேன்.

குறிப்புகள்

*[1]பொதுவாக நான் ஒரு பகுதியின் உள்ளூர் சபையின் பிரசங்க முகாம்களின் போது பிரசங்கிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படும்போது, தலைப்புக்கள் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன. [2]முன்பே குறிப்பிடப்பட்டபடி, கிரேக்கர்களுடனான இந்த நிகழ்ச்சி எப்போது நடைபெற்றது என்று நம்மால் உறுதியாகக் கூற இயலாது. [3]இயேசு பெண்களின் மண்டபத்தில் இருந்திருக்கலாம். நமது வரைக்குறிப்பில் இந்த வரலாற்றிற்கு முன்பு விதவையின் இரண்டு நாணயங்கள் பற்றிய வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி, பெண்களின் மண்டபத்தில் வைக்கப் பட்டிருந்த காணிக்கைப் பெட்டியினருகில் நடந்தது (லூக். 21:1). பெண்களின் மண்டபத்திற்குள் புறஜாதியார் வரமுடியாது. இது, இந்த வரலாற்றில் கிரேக்கர்கள் இயேசுவைக் காண விரும்பிய விவரத்துடன் பொருந்துகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இயேசு தாம் இருந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு, கிரேக்கர்கள் அவரைக் காணமுடிவதற்கு முன்பு புறஜாதியாரின் மண்டபத்திற்குச் சென்றிருப்பார். [4]புதிய ஏற்பாட்டில் - யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உட்பட - பலர் ''தேவனுக்குப் பயந்திருந்ததாக'' கூறப்படுகின்றனர். ஆனால் இந்த வார்த்தைகள் இன்னும் யூதர்களாகாதிருந்த, விசுவாசமுள்ள புறஜாதியாருக்கு ஒரு விசேஷித்த கருத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன. [5]"யூத மார்க்கத்தமைந்தவர்" என்ற சொற்றொடரானது proserchomai என்ற கிரேக்க வார்த்தையுடன் தொடர்புடையதாக உள்ளது, இது pros (''க்கு'' அல்லது ''நோக்கி'') என்ற முன்னிடைச் சொல்லை erchomai ("வருதல்") என்ற வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்டது. புதிய ஏற்பாட்டில், இது யூதத்துவத்திற்கு "வந்து" அதைத் தழுவிக் கொள்ளும் புறஜாதியாரைக் குறிக்கிறது. யூதமார்க்கத்தமைந்தவராகுதலில் மூன்று மடங்கான சடங்கு உள்ளடங்கிற்று: (1) ஆணாயிருந்தால், விருத்தசேதனம்; (2) சாட்சிகளின் முன்னிலையில் சுய-ஞானஸ்நானம் (முழுக்காட்டிக் கொள்ளுதல்); மற்றும் (3) (தேவாலயம் நிற்கும் வரை) ஒரு பலி செலுத்துதல். விருத்தசேதனம் தேவை என்று கூறப்பட்டதால் ஆண்களைவிட அதிகமான அளவில் பெண்கள் மனம்மாறினர். [6]"பிலிப்பு" என்பது "குதிரையை நேசிப்பவர்" என்று அர்த்தப்படுகிற கிரேக்கக் கூட்டுவார்த்தையின் சுருக்கச் சொல்லாக உள்ளது. [7]இரண்டு பெத்சாயிதாக்கள் இருந்தன. ஒன்று கலிலேயாக்கடலின் மேற்குப் பகுதியில் கப்பர்நகூமுக்கு அருகில் இருந்தது (மாற். 6:45). இன்னொன்று உண்மை யில் பெத்சாயிதா-ஜூலியஸ் என்று அழைக்கப்பட்டது, இது கடலின் வடகிழக்கில் இருந்த ஒரு கிராமமாக இருந்தது. பிலிப்பு அநேகமாகக் கப்பர்நகூமுக்கு அருகில் இருந்த பெத்சாயிதாவில் வாழ்ந்திருக்கலாம், ஆனால் அவர் அடிப்படையில் புறஜாதியாரின் பகுதியாக இருந்த கலிலேயாக் கடலின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்திருக்கலாம். [8]தொடக்க கால சபை வரலாற்றாளரான ஈசுபியஸ் அவர்கள், சீரியா நாட்டின் அரசனால் இயேசுவுக்கு ஒரு அகத் தொண்டு அளிப்பதற்காகக் கிரேக்கர்கள் அனுப்பப்பட்டனர் என்று ஏவுதல் பெற்றிராத பாரம்பரியமொன்று கூறியதாக குறிப்பிட்டார் - ஆனால் இது நிரூபணமற்ற கூற்றாக உள்ளது. [9]பிலிப்புவும் அந்திரேயாவும் ஒரே ஊரில் இருந்து வந்தவர்களாய் இருந்தனர் (யோவா. 1:44). [10]"மகிமை" என்பது கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய யோவானின் விவரத்தின் பிற்பகுதியில் பிரதானமான ஆய்வுப் பொருளாக உள்ளது. நீங்கள்*

வாசிக்கும்போது அதைக் கவனியுங்கள்.

[11]இயேசு பரலோகத்தில் இருப்பார் (2 கொரி. 5:8; பிலி. 1:23; வெளி. 21:3ஐக் காணவும்). [12]அந்தக் காட்சி, முன்னதாக எழுதியிருந்த ஒப்பீட்டு சுவிசேஷ எழுத்தாளர்களால் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டிருந்தது. [13]யோவான் 12:27ல் உள்ள "ஆகிலும்" என்ற வார்த்தையானது *alla* என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்த்த சொல்லாக உள்ளது, இது ஒரு adversativeஆக உள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் அநேகமாக, "ஆகிலும்" என்பதை விட பலமான வார்த்தையொன்று தேவைப்படலாம். RSVயில் "No" என்றுள்ளது. [14]இது ஒரு சில வார்த்தைகளால் கூறப்படாத ஆனால் புரிந்துகொள்ளப்படக் கூடிய பேச்சுருவகமான "வாக்கியச் சொல்லெச்சம்" என்று அழைக்கப்படுகிறது. [15]இவ்விடத்தில் "முறைமை" என்ற அடிப்படை அர்த்தம் கொண்ட *kosmos* என்ற கிரேக்க வார்த்தை, "உலகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வசனத்தில், இது அண்டத்தையல்ல, ஆனால் பூமியையே குறிக்கிறது. குறிப்பாக இது, பாறைகள் மற்றும் மரங்கள் போன்ற உலகப் பொருட்கூறுகளையல்ல, மாறாக "உலக அமைப்புமுறை"யைக் குறிப்பிடுகிறது. [16]யோவான் 12:32ல் உள்ள "if" [ஆங்கில வேதாகமத்தில் "when I am lifted up" என்றுள்ளது, ஆனால் தமிழ் வேதாகமத்தில் "நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது" என்றுள்ளது] என்ற வார்த்தையானது [தமிழில் உள்ளதுபோல்] "போது" என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது ..." அவருக்கு வரவிருந்த சிலுவை மரணத்தில் ஐயம் எதுவும் இருந்ததில்லை (அடுத்த வசனத்தைக் காணவும்). [17]காந்தம் ஒன்றின் இழுக்கும் தன்மை இங்கு பயன்படுத்தக்கூடிய இன்னொரு ஒப்புவமையாக உள்ளது. [18]"நியாயப்பிரமாணம்" என்பது இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளபடியாக, பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களை மட்டுமல்ல, ஆனால் பழைய ஏற்பாடு முழுவதையும் குறிப்பதாக உள்ளது. [19]நீங்கள் இந்த நடைமுறைப் பயன்பாட்டை உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பொருந்தும்படி விரித்துரைக்க விரும்பலாம். நீங்கள் வசனம் 25, 26ல் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட அறைகூவல்களுக்குத் திரும்பிச் செல்ல விரும்பலாம்: "நாம் மரிக்கத் தயாராக இருக்கின்றோமா இல்லையா என்பதை நாமே முடிவு செய்ய வேண்டும். நாம் நமது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புவிக்கத் தீர்மானிக்க வேண்டும். நாம் அவரது அறைகூவலின் நிபந்தனைகளிடத்தில் வரவேண்டும்!" நீங்கள் உங்கள் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துகையில், உங்கள் உரையைக் கேட்பவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாத வரையிலும் அவரைப் "பின்பற்ற" தயாராக இருப்பதில்லை என்று அவர்களுக்குக் கூற விரும்புவீர்கள். இது கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் உண்மையற்றுப் போயுள்ள கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் (மாற். 16:15, 16; அப். 2:38; 8:22, 23; யாக். 5:16).